Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-௵ அக்டோபர்௴ 24உ, வெள்ளிக்கிழமை. [இதழ் 32

# ஜப்பான் புதிய யுத்தம் ஆரம்பிக்குமா?

## தூரக்கிழக்கு அரங்கத்தில் நெருக்கடியான நிலைமை

### அமெரிக்க ஜப்பான் பேச்சு முடிவு

### ஜப்பான் சைபீரியாவைத் தாக்குமா?

ஜப்பான் ஜெர்மனியின் கூட்டாளி; அச்சு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மூன்று நாடுகளுள் ஒன்று. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இந்த மூன்று நாடுகளும் செய்துகொண்ட ஒப்பந்தம் உலக சுதந்தரத்தை அழிப்பதற்காகச் செய்யப்பட்டது. இத்தாலி, ஆப்பிரிகாவிலும், ஜெர்மனி ஐரோப்பாவிலும், ஜப்பான் தூரக்கிழக்குப் பிரதேசத்திலும், அழிவு வேலை செய்வதற்குப் பங்கு போட்டுக்கொண்டன. ஜெர்மனி ஐரோப்பாவில் பெரும் பாகத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இத்தாலி ஆப்பிரிக்காவில் முறியடிக்கப்பட்டது. ஜப்பான் தூரக்கிழக்குப் பிரதேசத்தில் ஜனநாயக தேசங்களுடன் இப்போது யுத்தம் ஆரம்பிப்பதற்குத் தயாராயிருக்கிறது.

ஜப்பானில் ஒரு புதிய மந்திரி சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜெனரல் டோஜோ என்பவர்தான் முதல் மந்திரி. இதற்குமுன் இருந்த கோனோயி மந்திரி சபை அமெரிக்காவுடன் சமாதானப் பேச்சு நடத்திக்கொண்டிருந்தது; அந்தப் பேச்சு முடிவதற்குள் ராஜிநாமா செய்துவிட்டது. நெருக்கடியான நிலைமையை உத்தேசித்து புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், மிஸ்டர் ஷிகநோரி என்பவர் ஜப்பானின் அயல் நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டது தான். இவர் ஜெர்மனியில் ஸ்தானீகராயிருந்தவர். லண்டனில் ஸ்தானீகராக இருக்கும் மிஸ்டர் ஷீகமிட்சு, புதிய மந்திரி சபை அமைக்கும்போது ஜப்பானின் தலைநகரமாகிய டோக்கியோவில் இருந்தார். இவரை நியமிக்காமல், ஜெர்மனியில் இருந்த ஸ்தானீகரை அயல் நாட்டு மந்திரியாக நியமித்ததால், ஜப்பானின் நோக்கம் என்னவென்று நன்றாகத் தெரிகிறது.

ஜெனரல் டோஜோவின் புதிய மந்திரி சபை, யுத்த மந்திரி சபையாகக் கருதப்படுகிறது. முதல் மந்திரி, யுத்த மந்திரி, உள் நாட்டு மந்திரி—இந்த மூன்று வேலைகளையும் ஜெனரல் டோஜோ தானே மேற்கொண்டிருக்கிறார். ஜெனரல் டோஜோ ஒரு முரட்டுத் தேசியவாதி. இருக்கிற நிலைமையைப் பார்த்தால் அவர் ரஷ்ய யுத்தத்தை ஜப்பானுக்குச் சௌகரியமாக உபயோகித்துக்கொள்ளுவார் என்று தெரிகிறது. மேற்கு யுத்த அரங்கத்தில் ஜெர்மனிக்கு எதிராக ரஷ்யா போராட முடியாதென்று தெரிந்ததும், ஜப்பான் ரஷ்யாவை கிழக்கிலிருந்து தாக்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

### ரஷ்ய-ஜப்பான் ஒப்பந்தம்.

ஆனால், ஜப்பான் ரஷ்யாவை எதிர்ப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்திருக்கிறதே என்று கேட்கலாம். அச்சு நாடுகள் எந்த ஒப்பந்தத்துக்கும் மதிப்புக்கொடுப்பதேயில்லை. முன் வாரத்தில் கூட ஜப்பான் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது; மங்கோலியாவுக்கும், மஞ்சூரியாவுக்கும் எல்லை எது என்று ஒப்பந்தத்தினால் முடிவு செய்யப்பட்டது. இருந்தபோதிலும், ஜப்பான், ரஷ்யாவுடன் சச்சரவு செய்து கொள்வதற்கு முன்னமேயே ஏற்பாடு செய்திருக்கிறது. ரஷ்யாவின் தூரக்கிழக்குப் பிரதேசத்தில் வ்ளாடி வாஸ்டோக் என்ற துறைமுகம் இருக்கிறது. இதன் வழியாக அமெரிக்காவிலிருந்து ரஷ்யாவுக்கு சாமான்கள் 'சப்ளை' வந்துகொண்டேயிருக்கிறது. ஜப்பான் கரையோரமாக இந்த் சாமான்கள் வருகின்றனவாம்; அம்மாதிரி வரக்கூடாது என்று ஜப்பான் எச்சரிக்கை செய்திருக்கிறது. சாமான் 'சப்ளை' வருவதைத் தடுக்கக்கூடாது என்று ரஷ்யா ஜப்பானை எச்சரிக்கை செய்திருக்கிறது. இந்த 'சப்ளை' வழியைத் திறந்துவைத்திருப்பதில் அமெரிக்காவும் கவலை எடுத்துக்கொண்டிருக்கிறது.

ஜப்பான் ரஷ்யாவைத் தாக்காவிட்டால், தெற்கு நோக்கி முன்னேறுவதற்கு முயற்சி செய்யும். டச்சு கிழக்கிந்திய தீவுகளின்மேல் ஜப்பான் அதிக காலமாகக் கண் வைத்திருக்கிறது. அந்தத் தீவுகளில் உள்ள மூலப்பொருள்களையும், ராணுவத் தளங்களையும் கைப்பற்றவேண்டுமென்பது ஜப்பானுடைய ஆசை. இண்டோ-சீனாவை மிரட்டி அதனுடைய ராணுவத்தளங்கள், கப்பல் தளங்கள் விமானத் தளங்கள் முதலியவற்றை ஜப்பான் கைப்பற்றிவிட்டது. அடுத்தபடியாக இருப்பது தாய்லாந்து. அதைப் பிடிப்பதற்கு இப்போது ஜப்பான் முயற்சி செய்வதாகத் தெரிகிறது. யார் எதிர்த்தாலும் அதை தடுத்துப் போராடுவதாக தாய்லாந்து தீர்மானித்திருக்கிறது. ஆனால் ஜப்பானிய ரேடியோவும், பத்திரிகைகளும், தாய்லாந்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்துவருகின்றன. கூடிய சீக்கிரம் ஜப்பான் தாய்லாந்தை தாக்கினாலும் தாக்கலாம். தாய்லாந்து தனிப்பட்டு நின்று ஜப்பானை எதிர்ப்பதென்றால் முடியாத காரியம். ஜனநாயக நாடுகள் உதவிசெய்தால் தான் தாய்லாந்து ஜப்பானை எதிர்த்துப் போராட முடியும்.

### ஜப்பானின் நிலைமை.

இப்போது ஜப்பானுடைய நிலைமை என்ன? ஐந்து வருஷங்களாக சீனாவுக்கு எதிராக நடத்திய யுத்தம் இன்னும் முடிந்தபாடில்லை. சீனா இப்போது ஜப்பானை எதிர்த்துத் தாக்கி சில வெற்றிகள் பெற்றிருக்கிறது. சீனத்தலைவர், மார்ஷல் சியாங்கே ஷேக், கடைசியில் சீனாதான் வெற்றி பெறும் என்று கூறியிருக்கிறார். அமெரிக்காவுடன் நடந்த ஒப்பந்தப்பேச்சில் ஜப்பான் வெற்றியடைந்ததாகத் தெரியவில்லை. ஜப்பானிய ஸ்தானீகர் அமெரிக்க அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறார். இருந்தபோதிலும் ஒப்பந்தப்பேச்சு உடைந்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

ஜப்பான் விஷயத்தில், பிரிட்டனும் அமெரிக்காவும் ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில், பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் சர்ச்சில், இதைப்பற்றிக் குறிப்பிட்டார். பிரிட்டனும், அமெரிக்காவும் எதிரிகளுடன் சமாதானத்தை விரும்பவில்லை என்றும், ஜப்பானுடைய அதிக்கிரமம் நிறுத்தப்படவேண்டுமென்றும் அவர் கூறினார். அமெரிக்காவின் கப்பல் படை மந்திரி, கர்னல் நாக்ஸ், இதைப்பற்றி அழுத்தமாகக் கூறியிருக்கிறார். அவர் கூறியதாவது:—நாஸிஸம் தோற்கடிக்கப்படுவது நிச்சயம். படிப்படியாக நாம் அநேக ஏற்பாடுகளைச் செய்து, ஹிட்லரையும், ஹிட்லருடைய துணைக்கிரகங்களான இத்தாலியையும் ஜப்பானையும் தோற்கடிக்கும் வேலையைச் செய்யப்போகிறோம்.

கர்னல் நாக்ஸ் சொன்னதிலிருந்து ஜப்பானிய—அமெரிக்க ஒப்பந்தப் பேச்சுகள் முறிந்துபோய்விட்டன என்று தெரிகிறது. பேச்சுகள் எதைப்பற்றி நடந்தன? ஜப்பானுடைய நிபந்தனைகள் என்ன? அமெரிக்கா என்ன பதில் கூறிற்று? இந்த கேள்விகளுக்குப் பதில் நடந்த விஷயங்களைச் சுருக்கமாகக் கூறினால், அதில் காணலாம். பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அட்லாண்டிக் கடலில் மிஸ்டர் சர்ச்சிலைச் சந்தித்து திரும்பிய பிறகு, பசிபிக் கடலில் யாதொரு

சண்டைக்கும் இடமில்லாமல் இருந்தால் நலம் என்று நினைத்தார். ஜப்பான் ரஷ்யாவைத் தாக்கக்கூடாது; இண்டோ–சீனாவிலிருந்து ஜப்பான் விலகவேண்டும்; அப்படிச் செய்தால், அமெரிக்காவில் இறுகிப்போன ஜப்பானிய சொத்துகளை விடுவிப்பதாக பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறினார்.

## ஜப்பானின் நிபந்தனைகள்.

இதற்குப் பதிலாக, ஜப்பான் திடுக்கிடும்படியான சில விஷயங்களைக் கேட்டது. சிங்கப்பூர், டச்சுக்கிழக்கிந்திய தீவுகள், ஆஸ்திரேலியா, பிலிப்பைன் தீவுகள்—இவைகளில் நடக்கும் யுத்த ஏற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும்; சீன–ஜப்பான் யுத்தத்தை நிறுத்தி, சமாதான உடன்படிக்கை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா உதவி செய்யவேண்டும். இதை எப்படி அமெரிக்கா ஒப்புக்கொள்ளும்? இருந்தாலும், பேச்சுகள் நடந்துகொண்டேயிருந்தன. ஜப்பானிய முதல் மந்திரி, பிரின்ஸ் கோனோயி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்டுக்கு ஒரு அழைப்பு அனுப்பியிருந்தார். எப்படி மிஸ்டர் சர்ச்சிலைச் சந்தித்து அட்லாண்டிக் சாசனத்தை வெளிப்படுத்தினார்களோ அதேமாதிரி தன்னைச் சந்தித்துப் பேசி ஒரு பசிபிக் சாசனத்தை வெளியிடவேண்டுமென்று பிரின்ஸ் கோனோயி கேட்டார். பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அதை ஒப்புக்கொள்ளவுமில்லை; மறுக்கவுமில்லை. அப்படிப்பட்ட சந்திப்பு ஒப்பந்தத்தின் முடிவாக இருக்கவேண்டுமே ஒழிய ஆரம்பமாக இருக்கலாகாது என்று மாத்திரம் அறிவித்தாராம்.

சென்ற சில வாரங்களாக, ஜப்பான்–அமெரிக்கப் பேச்சில் ஏதோ தடை ஏற்பட்டிருந்ததாகத் தெரிந்தது. சீன யுத்தத்தை முடிப்பதன் சம்பந்தமாக ஜப்பான் கூறிய நிபந்தனைகள் இந்தத் தடையை உண்டாக்கின. சீனாவினுடைய துறைமுகங்கள் ஜப்பானுடைய ஆதிக்கத்தின்கீழ் இருக்கவேண்டும்; சீனாவில் நான்கு மாகாணங்கள் ஜப்பானுக்கு ஒப்படைக்கப்படவேண்டும்; சீனாவின் இதர பாகங்களில் ஜப்பானியத் துருப்புகள் வைக்கப்படும். ஜப்பான் கேட்ட இந்த நிபந்தனைகளை அமெரிக்கா ஒப்புக்கொள்ளவில்லை. இந்த விஷயம் கர்னல் நாக்ஸ் பேச்சிலிருந்து தெரிகிறது.

## "ஏ. பி. சி. டி. பிரண்ட்"

தூரக் கிழக்கு அரங்கத்தில் ஜப்பான் ஏதாவது அதிக்கிரம முயற்சி செய்தால், அதைத் தடுப்பதற்கு ஜனநாயக நாடுகள் தயாராயிருக்கின்றன. அமெரிக்கா, பிரிட்டன், சீனா, டச்சுக்கிழக்கிந்திய தீவுகள் இவைகளெல்லாம் ஜப்பானுக்கு எதிராக ஒன்று சேர்ந்திருக்கின்றன. இதை ஆங்கிலத்தில் "ஏ. பி. சி. டி. பிரண்ட்" என்று கூறுவார்கள். "ஜப்பானுடன் சண்டை போடுவதற்கு எங்களுக்கு இஷ்டமில்லை; ஆனால் ஜப்பான் சண்டை போட ஆரம்பித்தால், அதற்கு நாங்கள் தயாராயிருக்கிறோம்" என்று தூரக்கிழக்கு அரங்கத்தில் உள்ள பிரிட்டிஷ் பிரதம தளகர்த்தர், சர் ராபர்ட் புரூக்–பாப்பாம் நிலைமையை விளக்கிக் கூறினார்.

இப்போது சிங்கப்பூர் கடற்படைத்தளம் அதிகமாக பலப்படுத்தப்பட்டு இருக்கிறது. டச்சுக் கிழக்கிந்திய தீவுகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தயாராக்கப்பட்டன. ஆஸ்திரேலியாவும் நியூசிலந்தும், யுத்தத்திற்குத் தயாராயிருக்கின்றன. டச்சுக்கிழந்திய தீவுகள் எதிரியை எதிர்க்கக் கங்கணங் கட்டிக்கொண்டு இருக்கிறது. தாய்லாந்தும், பர்மாவும், தங்களுடைய பாதுகாப்புகளைப் பலப்படுத்திக்கொண்டன. சீனா ஜப்பானை எதிர்த்துத் தாக்கி வருகிறது. ரஷ்யாவினுடைய கீழ்த்திசைப் பட்டாளம், கடற் படை, விமானப்படை இவைகளெல்லாம் ஜப்பானோடு போர் புரிவதற்கு ஆயத்தமாய் இருக்கின்றன.

கடைசியாக, அமெரிக்கா இருக்கிறது. தூரக் கிழக்கில் உள்ள ஜன நாயக நாடுகளுக்கு அமெரிக்கா யுத்த தளவாடங்கள் அனுப்பிக் கொண்டு வருகிறது. பிலிப்பைன் தீவுகள் அமெரிக்காவின் பக்கத்தில் சேர்ந்து சண்டை போடுவதற்குத் தயாராக்கப்பட்டது. பசிபிக் கடலில் முக்கியமான இடங்களிலெல்லாம், அமெரிக்கா ராணுவத் தளங்களை ஏற்படுத்தியிருக்கிறது. மாஸ்கோவைப் பாதுகாப்பதற்காக ரஷ்யத் துருப்புகள் கடுமையாகப் போராடும் நெருக்கடியான இந்த சமயத்தில், ஜப்பான் ரஷ்யாவைக் கிழக்கில் சைபீரியாவில் தாக்கலாம் என்று அமெரிக்காவில் எதிர்பார்க்கப்படுகிறது.

## போருக்குத் தயார்.

ஆனால், ஜப்பான் எங்கு தாக்கினாலும் சரி—சைபீரியா, தாய்லாந்து, கிழக்கிந்திய தீவுகள் எதுவாயிருந்தாலும் சரி—ஜன நாயக நாடுகள் அதை எதிர்த்துப் போராடுவதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றன. இப்போது கூட ஜப்பான் பின் வாங்கிச் செல்ல அவகாசம் இருக்கிறது. ஆனால் ஜப்பானில் யுத்தம் நடப்பதில் பிரியம் கொண்ட தலைவர்கள் அதற்கு இடங் கொடுக்கமாட்டார்கள். ஜப்பான் தன்னுடைய இஷ்டத்தின்படி நடப்பதற்கு நேச தேசத்தார்கள் கொஞ்சங்கூட இடங்கொடுக்கமாட்டார்கள்.

# ஜெர்மன் ரகசியப் போலீஸ் ஆட்சி

## ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் நடக்கும் அநியாயம்

### 4 நாளில் 145 பேரைக் கொலைசெய்த ஜெர்மன் கவர்னர்

ஐரோப்பாவின் பல பாகங்களில், ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் ஆண்டு வருகிறார்கள். அவர்களுடைய ஆட்சி அநியாயங்களும், கொடூரங்களும் நிறைந்தது. யாரார் மேல் அவர்கள் சந்தேகப்படுகிறார்களோ, அவர்களெல்லோரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள். ஜெர்மனிக்கு விரோதமாக எது நடந்தாலும், குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்கவேண்டிய வேலையேயில்லை. நாட்டு மக்கள் பலரைப் பிடித்து உடனே சுட்டுக்கொன்றுவி வேண்டியதுதான் அவர்களுடைய வேலை. ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலெல்லாம் இந்தக் கொடுங்கோலாட்சி தலைவிரித்துக்கொண்டு தாண்டவமாடுகிறது.

சென்ற சில வாரங்களாக, இந்தக் கொடுங்கோலாட்சியின் அட்டூழியங்கள் இன்னும் அதிகப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியின் எல்லையோரத்தில் ஐந்து நாடுகள் இருக்கின்றன. அவையாவன:— ஹாலந்து, செக்கோஸ்லாவாக்கியா, பிரான்சு, குரோஷியா, ஹங்கேரி. இதில் நான்கு நாடுகள் ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்களால் ஆளப்படுகின்றன. ஐந்தாவதாகிய ஹங்கேரி பேரளவுக்குச் சுயேச்சை நடே ஒழிய, உண்மையில் அதுவும் ஜெர்மனியின் அடிமை நாடுதான். இந்த ஐந்து நாடுகளிலும், ஜெர்மானியர்கள் நாட்டு மக்கள் அநேகரை சுட்டுக்கொன்று விட்டார்கள் என்று ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனங்கள் கூறுகின்றன. இந்த விவரங்களை, ஜெர்மன் எல்லையில் இருக்கும் "டெய்லி எக்ஸ்பிரஸ்" நிருபர் அக்டோபர்மீ 2-ந் தேதி, தன்னுடைய பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஹாலந்து நாட்டில், ஒரு ரகசிய அழிப்புச் சங்கம் இருக்கிறது. அது ஜெர்மானியர்களுக்கு விரோதமாக வேலை செய்துவருகிறது. ஜெர்மனிக்கு உபயோகமாகும் தொழிற்சாலைகள், யந்திரசாலைகள் முதலியவற்றை வெடிகுண்டுகள் வைத்து நாசமாக்குவது இந்த சங்கத்தைச் சேர்ந்தவர்களின் . வேலை. சங்கம் ரகசியமாக வேலை செய்வதால், அதைச்சேர்ந்தவர்கள் யார் என்று கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம். அப்படியிருந்தும், நான்குபேர் இந்த அழிப்புச் சங்கத்தின் தலைவர்கள் என்று ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் சந்தேகப்பட்டார்கள். உடனே நான்கு பேரையும் கைது செய்தார்கள். இதில் மூன்று பேரை ஒழுங்கான விசாரணை ஒன்றும் இல்லாமல், கொன்றுவிட்டார்கள். நான்காவது நபரை ஆயுள்பரியந்தம் சிறையில் இருக்கும்படி தண்டனை செய்துவிட்டாாகள்.

## ஐரோப்பாவின் கொலைகாரர்

செக்கோஸ்லாவாக்கியாவில் நடக்கும் கொலைகளுக்குக் கணக்கேயில்லை. புதிதாக நியமிக்கப்பட்ட ஜெர்மன் கவர்னர் ஹேட்ரிக் என்பவருடைய ஆட்சியின் கீழ், கொலைகள் அதிகப்பட்டிருக்கின்றன. "ஐரோப்பாவின் கொலைகாரர்" என்று இவருக்குப் பேரிடப்பட்டிருக்கிறது. தான் கவர்னராக நியமிக்கப்பட்ட நான்கு நாள்களுக்குள், இவர் 145 செக்கியர்களை (செக்கோஸ்லாவாக்கியா நாட்டு மக்களை)

க் கொன்றிருக்கிறார். இதல்லாமல், 228 பேரை ஜெர்மனிக்கு, கட்டாய வேலை செய்வதற்காக, அனுப்பியிருக்கிறார். இதற்கு முன், நூற்றுக்கணக்கான செக்கியர்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டு அங்கு கைதிக்கொட்டடிகளில் அடைந்து கிடக்கிறார்கள். அவர்களுடன் இப்போது அனுப்பப்பட்ட செக்கியர்கள் சேருவார்கள். ஹேட்ரிக் உத்தரவினால் கொலை செய்யப்பட்டவர்களுள் இரண்டு பேர் செக்கியர்களுடைய தளகர்த்தர்கள். இவர்கள் 1914–18-ம் வருஷங்களில் நடந்த உலக மாகாயுத்தத்தில் சண்டை செய்து பேரும் புகழும் பெற்றவர்கள். இவர்களில் ஒருவர் 72 வயதான கிழவர். அப்படியிருந்தும், கொஞ்சமாவது இரக்கமில்லாமல் இந்தக் கிழவரையும், மற்ற செக்கிய தளகர்த்தரையும், ஜெர்மானியர்கள் கொன்றுவிட்டார்கள்.

பிரான்சில், 42 வயதுடைய ஒரு தொழிலாளரைச் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். அவரிடம் ஒரு கைத்துப்பாக்கி இருந்ததாக ஜெர்மானியர்கள் கூறுகிறார்கள். இது உண்மையா என்ற விஷயம் யாருக்கும் தெரியாது. தொழிலாளரைக் கைது செய்து, பாரிசில் உள்ள நாஜிகளின் ராணுவக் கோர்ட்டின்முன் விசாரணைக்குக் கொண்டுபோனார்கள். உடனே அவரைச்சுட்டு விடும்படி கோர்ட்டு தீர்ப்பளித்தது. யாதொரு குற்றமும் செய்யாத சில்லியன் திரிபுலுவா என்று அந்தத் தொழிலாளியைக் கொலை செய்துவிட்டார்கள்.

### 10 பேருக்குத் தூக்குத் தண்டனை

குரோஷியர் என்ற நாட்டிலும் ஜெர்மானியர்களுடைய அநியாயத்துக்கு அளவேயில்லை. அந்த நாட்டில் உள்ள சாகரெப் என்ற பட்டணத்தில் இரண்டு ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்களாம். அதற்காக, பத்து பொதுவுடைமைக் கட்சியைச்சேர்ந்தவர்களுக்கு கொலைத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு ஜெர்மானியர்களும், பத்து நாஜி சிப்பாய்களுடன் நடந்துபோய்க்கொண்டிருந்தார்களாம். திடீரென்று யாரோ சிலர் அவர்களை நோக்கிச் சுட்டார்கள். இரண்டு ஜெர்மானியர்கள் இறந்துபோனார்கள்; மூன்றாவது ஜெர்மானியருக்குக் காயம் ஏற்பட்டது. உடனே பக்கத்திலுள்ள கட்டடங்களில் தேடி, ஆறு பொதுவுடைமைக் கட்சியைச்சேர்ந்தவர்களைக் கைது செய்தார்கள். ஜெர்மானியர்களைக் கொன்றவர்கள் தப்பி ஓடிவிட்டார்கள்; இவர்கள் பிடிக்கப்பட்டார்கள். கூட வேறு நான்கு பேரையும் பிடித்து, மொத்தம் பத்து குரோஷியர்களை, குற்றம் செய்யாத குரோஷியர்களை, தூக்கிலிடும்படி தீர்மானிக்கப்பட்டது.

ஹங்கேரி நாட்டில், அழிவு வேலை செய்ததற்காக, 42 சர்பியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதல்லாமல், 38 சர்பியர்கள் கைது செய்யப்பட்டு, பிணையாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் வேறு ஏதாவது அழிவு வேலை நடந்தால், இந்த 38 பேர்களும் சுட்டுக்கொல்லப்படுவார்கள் என்று ஜெர்மானியர்கள் அறிவித்திருக்கிறார்கள். பிணை எடுப்பது என்ற வழக்கம் இப்போது மிகவும் அதிகப்பட்டு வருகிறது. எங்காவது ஏதாவது கலகம் நடந்தால், உடனே அந்தப் பிரதேசத்தில் இருக்கும் பிரபல தலைவர்கள் முதலியவர்களைப் பிணையாகப் பிடித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். மறுபடியும் ஏதாவது கலவரம் நடந்தால், பிணையாகப் பிடிக்கப்பட்டவர்கள் கொல்லப்படுவார்கள். இம்மாதிரி செய்தால், ஜெர்மானியர்களுக்கு எதிராக ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டில் இருக்கும் மக்களின் விரோத உணர்ச்சியை அடக்கி விடலாம் என்று ஜெர்மானியர்கள் நினைக்கிறார்கள். ஆனால் வெள்ளம்போல புரண்டு எழுந்துவரும் விரோத உணர்ச்சியை ஜெர்மானியர்கள் அடக்கி விடுவது மிகவும் கஷ்டமான காரியம்.

# தரை வழியாகப் படையெடுத்தல்

## பிரிட்டனுடைய நிலைமையும், ஜெர்மனியின் நிலைமையும்

### மத்திய கிழக்கு அரங்கத்தில் நெருக்கடி

### இந்தியாவைப் பாதுகாக்கும் கடமை

ஜெர்மனி ரஷ்யாவுடன் இப்போது போர்புரிகிறது. ரஷ்யாவில் ஏராளமான ஜெர்மன் துருப்புகள் இருக்கும்போது, மேற்கே ஜெர்மன் நாடுகளை ஏன் தாக்கக்கூடாது?—என்று பிரிட்டனில் சிலர் கேட்க ஆரம்பித்தார்கள். இதைப்பற்றி பார்லிமெண்டு சபையில், பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், குறிப்பிட்டார். பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகளைத் தாக்குவதோ, அல்லது தாக்காமல் இருப்பதோ—அதைப்பற்றி பிரிட்டன் ஒன்றும் சொல்லக்கூடாது; ஏனென்றால், வெளியில் சொல்வதால் எதிரிகள் முன் ஜாக்கிரதையாய் விடுவார்கள் என்று அவர் சொன்னார். இதல்லாமல், பிரிட்டன் ஒருக்கால் கடல்வழியாகவும், ஆகாய வழியாகவும் தாக்கப்பட்டால், முதல்தரமான படைகள் பிரிட்டனைப் பாதுகாப்பதற்காக வைத்திருக்கவேண்டும் என்றும் அவர் விளக்கிக்கூறினார். மிஸ்டர் சர்ச்சில் கூறியதிலிருந்து பிரிட்டன் என்ன செய்யப்போகிறது என்ற விஷயம் தெரியவில்லை. ஜெர்மனி இதனால் மனங் கலங்கியிருக்கிறது. பிரிட்டனைத் தாக்கப்போவதாகக் கூறிய ஜெர்மனியின் ஜம்பப்பேச்சு இப்போது குறைந்திருக்கிறது. பிரிட்டன், ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பாவைத் தாக்கலாம் என்ற எண்ணம் ஜெர்மானியர்களிடம் பரவியிருக்கிறது. இதனால் இப்போது இருக்கும் கஷ்டங்கள் இன்னும் அதிகப்படும் என்று அவர்கள் உணருகிறார்கள்.

ஜெர்மனியைத் தரைவழியாகத் தாக்கவேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படிச் செய்தால், இரண்டு போர் முனைகளில் ஜெர்மனி சண்டை போடவேண்டியதாய் இருக்கிறது. அதாவது, கிழக்கில், ரஷ்யாவில் ஒரு போர் நடக்கிறது. மேற்கிலும் ஒருபோர் தொடங்கினால் ஜெர்மனியினுடைய கவனம் இரண்டு பக்கங்களில் திருப்பப்படும். அப்படிச் செய்வதால், ரஷ்யாவுக்கு நல்ல உதவிசெய்தது போலாகும். ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் உள்ள மக்கள் ஜெர்மனிக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து, பிரிட்டனுக்கு உதவிசெய்வார்கள். பிரிட்டன் தரை வழியாகத் தாக்குகிறது என்ற செய்தியே ஜெர்மானியர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தும். விரைவில் வெற்றி பெறுவதற்காக, பிரிட்டன் எந்தத் தியாகமும் செய்வதற்குத் தயாராயிருக்கிறது என்ற உணர்ச்சி பரவுவது ஒரு பெரிய நன்மையான காரியம்.

### ரஷ்யாவுக்கு உதவி.

தரை வழியாகத் தாக்குதலுக்கு விரோதமாக சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். அவர்கள் கூறுவதாவது:—ஜெர்மனி இப்போது இரண்டு போர் முனைகளில் தான் போரிடுகின்றது. ஜெர்மனியின்மேலும், ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட நாடுகள் மேலும், பிரிட்டிஷ் விமானங்கள் நாள்தோறும் வெடிகுண்டுகளைப் போட்டுக்கொண்டே வருகின்றன. ஜெர்மனியினுடைய தொழிற்சாலைகள் நாசமாக்கப்படுகின்றன. போக்கு வரவு சாதனங்கள், துறைமுகங்கள், கப்பல்சாலைகள், விமானச்சாலைகள், யந்திர வேலைச்சாலைகள், இவைகளெல்லாம் விமானத் தாக்குதலால் பழுதாக்கப்பட்டு நாசம் செய்யப்படுகின்றன. இதல்லாமல், ரஷ்யாவுக்கு யுத்த உதவி போய்க்கொண்டே இருக்கிறது. வேறு யுத்தம் ஆரம்பித்தால், ரஷ்யாவுக்கு யுத்த சாமான்கள் அனுப்புவது தடைப்படும். இதனால் ரஷ்யாவுக்கு உதவிசெய்வது போய், கெடுதல் செய்ததாக முடியும்.

இதல்லாமல், பிரிட்டன் தரைப்படைகளை அனுப்பிவிட்டால் ஜெர்மனியை வீழ்ச்சியடையும்படி செய்துவிடலாம் என்று நினைப்பது தவறு. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் உள்ள மக்களின் உதவி கிடைப்பதற்கு முன், அங்கு ஜெர்மனியர்களால் ஏராளமான கொலைகள் நடக்கும். பிரிட்டனுடைய தரைப்படைக்கு உதவி செய்வதற்கு, அந்த நாட்டு மக்கள் பயிற்சிபெற்றுத் தயாராகவேண்டும். இது சுலபமாக நடக்கக்கூடிய காரியமல்ல. சென்ற உலக யுத்தத்தில், தரைச்சண்டையில் ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்கு 4 வருஷங்கள் ஆயிற்று.

யுத்தசாமான்கள் உற்பத்தி செய்வதன் சம்பந்தமாக, சில விஷயங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். டாங்கிகள், ஆகாயவிமானங்கள், வெடிகுண்டுசாமான்கள் முதலியவற்றின் உற்பத்தி அதிகரித்துக்கொண்டுவருகிறது. ஆனால் எவ்வளவு அதிகரிக்கவேண்டுமோ, அவ்வளவு அதிகரிக்கவில்லை. இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு, நேசதேசத்தாரிடம் மூலப்பொருள்களும், உற்பத்தி சௌகரியங்களும் இருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில், எவ்வளவு உற்பத்தி செய்யமுடியுமோ அவ்வளவும் செய்யும்படியான நிலைமை கட்டாயம் ஏற்படும். தரைச்சண்டையில் வெற்றியடைய வேண்டுமென்றால், யுத்தசாமான் உற்பத்தி உச்சநிலை அடையவேண்டும். பிரிட்டன் இந்த உற்பத்தி போட்டியில், அதிக காலம் சென்றுதான் சேர்ந்தது. ஆகையால், உற்பத்தி உச்சநிலை அடைவதற்கு இன்னும் சிறிதுகாலம்வேண்டும்.

### பிரிட்டனுடைய பொறுப்பு.

இப்போது பிரிட்டன், அட்லாண்டிக்கடலில் தன்னுடைய கப்பல்களை எதிரிகள் முழுகடிக்காமல் பாதுகாத்துக்கொண்டுவருகிறது. பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை ஜெர்மனியின் யுத்த ஆயுததொழிற்சாலைகளைத் தாக்கிக்கொண்டுவருகிறது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் ஜெர்மன் விமானத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. இந்த சமயத்தில, பிரிட்டனுடைய கவனம் வேறுவழியில் செல்லாமலிருப்பது நல்லது.

மேலும், ஜெர்மனியின் நோக்கம் இனிமேல் தெற்குநோக்கிச்செல்வதில் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது. எகிப்திலிருந்து இரான்வரைக்கும் உள்ள போர்முனையில் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஏற்படலாம். ஜெர்மானியர்கள் ஈஜியன்கடல், கருங்கடல், இவைகளை நெருங்குவதற்குள், மத்திய கிழக்காங்கத்தில் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். யுத்தம் புதிதான போக்கில் சென்றுகொண்டிருக்கிறது. இந்தியாவுக்கு அபாயம் வரும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. எகிப்தில் நைல் நதியிலிருந்து, வடக்கே காகசஸ்மலைப் பிரதேசம் வரைக்கும் உள்ள போர் முனையைப் பிரிட்டன் பாதுகாக்கவேண்டும்.

பிரிட்டன் தரைவழியாகத் தாக்குவது உசிதமல்லவென்று அமெரிக்க ராணுவ நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படித் தாக்குவதால் கெடுதல் நேருமே ஒழிய, நன்மை ஏற்படாது என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகையின் ராணுவ நிருபர் இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். அவர் எழுதியிருப்பதன் சாரமாவது.—

### அமெரிக்க நிபுணர்கள் அபிப்பிராயம்.

இப்போது ரஷ்யா ஒரு நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. இந்த சமயத்தில் ரஷ்யாவுக்கு உதவி செய்வதற்காக, மேற்குப் போர்முனையில் படை யெடுப்பதற்கு நேரமும் இல்லை; படையெடுப்பதற்குச் சௌகரியங்களும் இல்லை, ரஷ்யா ஏராளமான நஷ்டமடைந்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், இந்த யுத்தத்தைப் பொறுத்தவரையில், ரஷ்யாதான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்; வேறு வழியில்லை. ஏனென்றால், படையெடுப்பதற்கு, பிரிட்டனிடம் தயார் செய்யப்பட்ட படைகள் இல்லை. ஐரோப்பாவின் மேல் இப்போது படையெடுத்து வெற்றி பெறுவதற்கு வேண்டிய ஆகாய விமானங்கள், டாங்கிகள், யுத்த தளவாடங்கள் முதலியன பிரிட்டனிடம் இல்லை.

அமெரிக்க ராணுவ நிருபர்கள் இன்னும் சில விவரங்களை விளக்கிக் காட்டுகிறார்கள், பிரிட்டன் படையெடுப்பதாயிருந்தால், அதைத்தடுப்பதற்கு, மேற்குப் போர்முனையில் ஜெர்மனி 100 படைகளை வைத்திருக்கிறதென்றும், படையெடுப்பதாயிருந்தால் அதற்காக உபயோகப்படுவதற்கு 20 படைகள் தான் பிரிட்டனிடம் இருக்கின்றன வென்றும், அவர்கள் கூறுகிறார்கள். இதனால், இப்போதிருக்கும் நிலைமையில், பிரிட்டன் தரைவழியாக ஜெர்மனியைத் தாக்குவது அவ்வளவு சிலாக்கியமான காரியம் என்று சொல்வதற்கில்லை.

## வாரச் செய்திக் குறிப்புகள்

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப் போர்

சென்ற வாரம் வழக்கம்போல, பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் ஜெர்மனியின் முக்கியமான பாகங்களை வெடிகுண்டுகளால் தாக்கின. முக்கியமாக, மேற்கு ஜெர்மனியில் உள்ள தொழிற்சாலைப்பட்டணங்களும், துறைமுகப்பட்டணங்களும் கடுமையாகத் தாக்கப்பட்டன. பிரெமென், எம்டன், மானர்ஹிம், பர்லின் முதலிய பல பட்டணங்கள் தாக்கப்பட்டன. வடக்கு பிரான்சின்மேலும், இத்தாலியில் நேப்பில்ஸ் என்ற நகரத்தின்மேலும், பிரிட்டிஷ விமானங்கள் வெடிகுண்டுகள் போட்டன.

பிரிட்டனில், சில ஜெர்மன் விமானங்கள் பறந்து கிழக்கு ஆங்கிளியா பிரதேசத்திலும், வடக்கு வேல்ஸிலும் வெடி குண்டுகளைப்போட்டன. மூன்று ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

பிரிட்டனுக்கு வீண் தொந்தரவு கொடுப்பதற்காக, சில ஜெர்மன் விமானங்கள் பல பாகங்களில் பறந்து திரிந்தன. ஒரு கரையிலிருந்து மற்றக்கரை வரைக்கும், அதாவது கிழக்கு ஆங்கிளியாவிலிருந்து மர்கிசைட் வரைக்கும், ஜெர்மன் விமானங்களை பிரிட்டிஷ் விமானங்கள் துரத்திக்கொண்டு சென்றன. இதில் இரண்டு ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன. அதனால் அதிகமான சேதம் ஒன்றும் உண்டாகவில்லை.

### 2. இத்தாலி : ஆப்பிரிக்கா ; மத்தியதரைக் கடல்.

இத்தாலி ஜெர்மனியினுடைய கூட்டாளியாகையால், ரஷ்ய யுத்தத்தில் தனக்கு உதவி புரியும்படி ஜெர்மனி அதைக் கேட்டிருக்கிறது. தனக்கு ஏராளமான துருப்புகள் சேதமடைந்துவிட்டதால், ஜெர்மனி இத்தாலியத் துருப்புகளின் உதவியை விரும்புகிறது. ரஷ்யா, பிரான்சு, யூகோஸ்லாவியா முதலிய மூன்று நாடுகளில் உபயோகப்படும்படியாக 10 லட்சம் இத்தாலிய சிப்பாய்களை அனுப்பும்படி ஜெர்மனி கேட்டிருக்கிறது. இந்த 10 லட்சம் இத்தாலியர்கள் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு மேலே குறிப்பிட்ட மூன்று நாடுகளுக்கும் அனுப்பப்படுவார்கள் என்று தெரிகிறது. இப்படி செய்யப்பட்டால், இத்தாலியில் உள்ள ராணுவ பலம் குறைந்துவிடும். பிறகு இத்தாலியை சீக்கிரத்தில் அடக்கிவிடலாம். இதுதான் ஜெர்மனியின் நோக்கம் என்று மிசிகன் நாட்டு உதவி அரசியல் மந்திரி, மிஸ்டர் பிரேக்கின் ரிட்ஜ்லாஸ், ஒரு பிரசங்கத்தில் கூறினார்.

ஆப்பிரிக்காவில், மேற்குப் பாலைவனத்தில், தோப்ரூக்குக்கு அருகில்வர முயற்சித்த ஒரு இத்தாலியப்படை பிரிட்டிஷ் படைகளால் துரத்தப்பட்டது. தோப்ரூக்கைக் கைப்பற்றுவதற்காக, எதிரிகள் கடுமையாக முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சி கைகூடவில்லை. 186 நாள்களாக, அதாவது ஆறு மாதங்களுக்குமேல், எதிரிகள் தோப்ரூக்கைத் தாக்கிக்கொண்டே இருக்கிறார்கள். பிரிட்டிஷ் படைகள் அவர்களைத் தடுத்து, தோப்ரூக் கோட்டையைப் பாதுகாத்து வருகின்றன.

### தோப்ரூக்கின் முக்கியம்.

இதைப்பற்றி, ஜெனரல் சர் ஜான் டில் என்ற பிரிட்டிஷ் பிரதம தளகர்த்தர் ஒரு ரேடியோ பிரசங்கத்தில் சொன்னார். அவர் சொன்னதாவது:—

"மால்டா எப்படி மத்தியதரைக் கடலில் பிரிட்டிஷ் பாதுகாப்பாக இருக்கிறதோ, அதைப்போல், தோப்ரூக், ஆப்பிரிக்காவில் உள்ள எகிப்து தேசத்தின் பாதுகாப்பாக விளங்குகிறது. இந்தப் பாதுகாப்பை எதிரிகள் கைப்பற்றாதபடி, நீங்கள் தைரியமாக சண்டை செய்கிறீர்கள். ஆகாயத்திலும்,

## கிழக்கிந்திய விமானப் படை.




**பிரிட்டிஷ் யுத்த சேவைக்காகக் கிழக்கிந்தியா கொடுத்து உதவிய பணத்திலிருந்து இரண்டு 'ஸ்பிட்பைர்' விமானப்படைகள் ஏற்படுத்தப்பட்டன. அப்படையைச் சேர்ந்த விமானி ஒருவர் யுத்த முனையிலிருந்து ஜெயத்துடன் வந்து இறங்குவதை மேலே காணலாம்:**

---

தரையிலும், எதிரிகளை விரட்டியடித்திருக்கிறீர்கள்.
உங்களைப்பற்றி நாங்கள் பெருமையடைகிறோம்.''

இந்தியாவும் தோப்ரூக் பாதுகாப்பைப்பற்றிப்
பெருமையடைய வேண்டும். ஏனென்றால், பாது
காப்பு வேலையில் இந்தியத் துருப்புகளும் சேர்ந்தி
ருக்கின்றன. இதைப்பற்றி, முன் இந்தியாவின்
பிரதம தளகர்த்தராயிருந்த சர் கிளாட் ஜேகப்,
லண்டனில் செய்த ஒரு ரேடியோ பிரசங்கத்தில்
குறிப்பிட்டிருக்கிறார். அந்த ரேடியோ பிரசங்கம் தோப்
ரூக்கிலிருக்கும் இந்தியத் துருப்புகளுக்காகச் செய்
யப்பட்டது. சர் கிளாட் ஜேகப் சொன்னதாவது :—

"இந்திய சிப்பாய்களும், பிரிட்டிஷ் சிப்பாய்க
ளும் ஒன்று சேர்ந்து நாஜிகளுடைய அக்கிரமத்
தை எதிர்த்துப் போராடுகிறார்கள். நாஜிகளுடைய
அக்கிரமம் அடியோடு அழிக்கப்படுகிறவரையில், உண்
மையான சமாதானத்தை நிலைநிறுத்தமுடியாது.
பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்திய சிப்பாய்கள் செய்த
பெரிய சேவையை எந்தக் காலத்திலும் மறக்
காது."

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்கத் தலைவர், மிஸ்டர் ரூஸ்வெல்ட், நடு
நிலைமைச் சட்டத்தை விரைவில் மாற்றவேண்டும்
என்று அபிப்ராயப்படுகிறார் என்று அவருடைய பிரதி
நிதி மிஸ்டர் ஸ்டீபன் எர்லி என்பவர் அறிவித்தார்.
இது சம்பந்தமாக, அமெரிக்க சட்டசபை சீக்கிரத்தில்
ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று அவர் கூறி
னார். பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் அபிப்பிராயங்
களைப்பற்றி அவருடைய பிரதிநிதி பத்திரிகை நிரு
பர்களிடம் விளக்கிக் கூறினார். அமெரிக்கக் கப்பல்
கள் யுத்தம் நடக்கும் பிரதேசங்களிலுள்ள துறை
முகங்களுக்குச் செல்லவேண்டும்; அமெரிக்க வர்த்
தகக் கப்பல்களுக்கு யுத்த தளவாடங்கள் பூட்டக்
கூடாது என்ற தடையை நீக்கவேண்டும்—இந்த சீர்
திருத்தங்களைச் சட்டசபை செய்ய வேண்டுமென்று
பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் விரும்புகிறார். அவரு
டைய அபிப்பிராயங்களை அமெரிக்க சட்டசபை ஒத்துக்
கொண்டு, சட்டத்தில் வேண்டிய மாறுதல்களைச் செய்
யும் என்பதற்கு சமீபத்தில் சில காரணங்கள் ஏற்பட்
டிருக்கின்றன. சென்ற வாரம் இரண்டு அமெரிக்கக்
கப்பல்கள் ஜெர்மன் 'சப்மரீன்' கப்பல்களால் தாக்
கப் ட்டு முழுகடிக்கப்பட்டன. "போல்டு வெஞ்சர்",
"லீஹை" என்ற பெயர்களுடைய அமெரிக்கக் கப்
பல்கள் முழுகடிக்கப்பட்டது. அமெரிக்காவில்
மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. எல்லா
கப்பல்களுக்கும் யுத்த தளவாடங்கள் பூட்டவேண்டிய
அவசியத்தைப்பற்றி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் வற்
புறுத்திக் கூறியிருக்கிறார்.

## 4. ரஷ்யாவும், பின்லாந்தும்.

ரஷ்யாவில் நடக்கும் யுத்தம் ஒரு நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. ரஷ்யத் தலைநகராகிய மாஸ்கோவைப் பிடிப்பதற்காக, ஜெர்மானியர்கள் கடுமையாகப் போராடுகிருர்கள். மாஸ்கோவின் வெளிப் பாதுகாப்புகளை உடைத்துச் சென்றுவிட்ட தாக ஜெர்மன் துருப்புகள் கூறுகின்றன. ஆனல் ரஷ்யத்துருப்புகள் அவைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்றன. மாஸ்கோவுக்கு 38 மைல் தூரத்தில் ஜெர்மன் துருப்புகள் இருப்பதாக ஜெர் மன் ராணுவ அதிகாரிகள் கூறுகிருர்கள். கார் கோப் பிரதேசத்தில் ஜெர்மனியின் முன்னேற் றத்தை ரஷ்யத்துருப்புகள் தடுத்துவிட்டன. தெற் குப்பகுதியில், கிரைமியாவைப் பிடிப்பதற்காக ஜெர் மானியர்கள் பெருமுயற்சி செய்கிருர்கள். கிரைமியா சண்டையில் 5,000 ஜெர்மானியர்களும், ருமேனியர் களும் கொல்லப்பட்டார்கள். 100 ஜெர்மன் ஆகாய விமானங்கள் நாசமாக்கப்பட்டன. ஒடெஸ்ஸா என்ற தெற்குப்பகுதிப் பட்டணத்தைப்பிடித்ததில் ருமேனி யர்கள் ஏராளமான சேதம் அடைந்தார்கள். 12 ருமேனியப் பட்டாளங்கள், 200 ஆகாய விமானங் கள், நூற்றக்கணக்கான டாங்கிகள், பீரங்கிகள், இவைகளெல்லாம் ருமேனியர்களுக்கு நஷ்டம்.

ரஷ்யாவில் நடக்கும் பிரம்மாண்டமான சண்டை யில் இதுவரை ஹிட்லர் ஏன் தன்னுடைய நோக்கங் களை விரைவில் நிறைவேற்ற முடியவில்லை என்ப தைப்பற்றியும், இப்போதுள்ள யுத்த நிலைமையைப் பற்றியும், சென்றவாரம் சில விவரங்கள் வெளியிடப் பட்டன. அவைகளின் சுருக்கம் பின்வருமாறு ;—

தமது படைகளை ரஷ்யா மீது பாயும்படி ஏவின போது உள்நாட்டுப் பிரிவுகள் தமது வெற்றிக்கு வழி காலிவிடும் என்பது ஹிட்லரின் எண்ணம். திறமைவாய்ந்த க்வீஸ்லிங் கூட்டத்தினர் பலர் ஜெர்மன் படைகளைப் பின் தொடர்ந்து சென்ருர்கள். ஆனல் படை யெடுப்பைக் கண்டு திடுக்கிட்ட ரஷ்யர்கள் உடனே நாட்டைக் காப்பதற்காகத் திரண்டெழுந்தார் கள். அவர்களுடைய ஆவேசத்தைக் கண்டு ஜெர்மன் அதிகாரிகளே திடுக்கிட்டுப் போய்விட்டார்கள். ரஷ்ய ராணுவ அமைப்பு பிரம்மாண்டமானது ; உரம் மிகுந்தது. ஆள் பலத்திலே ரஷ்யாவுக்கு இணை கிடையாது. தளவாட விஷயத்திலும் அதற்குக் குறைவிருக்குமென்று தோன்றவில்லை. சோவியத் கப்பற்படையோ, பால்டிக்கிலும் கருங்கடலிலும் ஜெர் மனியால் என்ன ஆபத்தேற்பட்டாலும் சமாளிக்கக் கூடிய முஸ்தீப்புடன் இருக்கிறது. ரஷ்யாவிடம் ஏராளமான நீர்மூழ்கிகள் இருப்பதாகத் தெரிகிறது.

### ரஷ்ய விமானப் படை பலம்.

ரஷ்ய விமானப் படை ஜெர்மன் விமானப் படைக்கு இளைத்ததல்ல. ஜெர்மன் விமானப் படையால் இது வரை ரஷ்யப் போர் முனையில் ஆதிக்கம் பெற முடிய வில்லை. ரஷ்யர்கள் அஞ்சா நெஞ்சு படைத்த விமானிகள். பாரச்சூட்டோடு குதித்துப் பழகுவதற் கான உயர்ந்த கோபுரங்களை ரஷ்யாவின் பல நகரங் களில் உல்லாசத் தோட்டங்களில் காணலாம்.

ஆகாய மார்க்கமாய்த் துருப்புகளும் யுத்தப் பொருள்களும் கொண்டு போய் வழி காட்டியது ரஷ்யாதான். பாரச்சூட் துருப்பு பயிற்சியில் பேர்பெற்றதும் ரஷ்யாதான். விமானமூலம் லேசான டாங்கிகளையும் கொண்டு செல்லமுடியும் என்று செய்து காட்டியதும் ரஷ்யாதான்.

மற்ற இடங்களில் அசாத்தியத் திறமையுடன் கையாளப்பட்ட ஜெர்மன் மின்னல்போர் முறைகள் ரஷ்யப் போர் முனையில் பலிக்காமற் போனதேன் ? இதற்குக் காரணங் கண்டு பிடிப்பது வெகு சுலபம். ரஷ்யப் பட்டாளங்களுக்கு சமயத்துக்கேற்றபடி நடந்துகொள்ளும் சக்தி இருக்கிறது. ரஷ்ய தரைப் படைகளும் விமானப் படைகளும் திறமையோடு ஒத்துழைத்திருக்கின்றன. இதனுல், முன்னணியில் சென்ற டாங்கிப் படைகளுக்கும் மோட்டார் சைக்கிள் படைகளுக்கும் பக்கபலமாகப் போய்க்கொண்டிருந்த ஜெர்மன் பட்டாளத்தின் பல பிரிவுகளை ரஷ்யப் படைகள் அழித்துவிட்டன.

### அக்கினிக்கு இரை.

எல்லாவற்றையும் அக்கினிக் கிரையாக்கி விடுவ தென்றும் ரஷ்யரின் கொள்கைக்கு ஜெர்மானியர் இதுவரை பதில் கண்டு பிடித்ததாகத் தெரிய வில்லை. "ஒரு ரயில் எஞ்சின் கூட, ஒரு ரயில் வண்டி கூட, ஒரே ஒரு துண்டு ரொட்டி கூட, ஒரே ஒரு சொட்டு எண்ணெய்கூட எதிரிக்குக் கிடைக்காத படி செய்து விடவேண்டும். அவர்களால் சகிக்க முடியாத நிலைமையை ஏற்படுத்த வேண்டும். செல்லுமிடமெல்லாம் அவர்களைத் துரத்திச் சென்று அழிக்கவேண்டும்" என்று ரஷ்யத் தலைவர் ஸ்டா லின் கூறியிருக்கிருர்.

ரஷ்யர்கள் சரியான சமயத்தில் எதிர்த் தாக்குதலை ஆரம்பிக்கிருர்கள். இதிலிருந்து ரஷ்யப் படை களுக்குப் பின்னுலிருந்து நல்ல சப்ளை கிடைக்கிற தென்று தெரிகிறது. ரஷ்யப் போக்குவரத்து சாத னங்கள் அசாத்தியமான வேலையை செய்துவருகின் றன.

ரஷ்யர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தில் ஒன்று, ஜெர்மானியர்கள் காகஸஸிலும் உக்ரெய்னிலுமுள்ள செழிப்பான ஆதாயங்களைக் கைப்பற்றச்செய்யும் முயற்சியாகும். உக்ரெய்னையும் காகஸஸையும் பிடி த்துவிட்டால் ஜெர்மனிக்கு பாகுவிலும் க்ரோஸ்னி யிலும் ஆதிக்கம் ஏற்படத்தான் செய்யும். இவ் விரண்டிலிருந்துதான் ரஷ்யாவுக்கு வேண்டியிருக் கும் எண்ணெயில் பெரும்பாகம் கிடைக்கிறது. அப் போது, டான் தீரத்திலுள்ள உலோக தொழிற்சாலை கள், யந்திர தொழிற்சாலைகள் மீதும் க்யூபாவைச் சேர்ந்த உக்ரெய்னிலுள்ள செழிப்பான கோதுமை வயல்களின் மீதுங்கூட ஜெர்மானியருக்கு ஆதிக்கம் கிடைத்துவிடும். ஆனல் இதனுல் ரஷ்ய எதிர்ப்பு ஒய்ந்துவிடுமென்ருே, அவர்களுடைய பொருளா தார ஆதாயங்கள் அடியோடு போய்விடுமென்ருே, நினைப்பதற்கு இடமில்லை.

### அதைரியத்துக்கு இடமில்லை.

காகேஷியாவிலும் உக்ரெய்னிலும் உள்ள தங்கள் பிரதேசங்களை ஒருவேளை இழக்க நேரிடும் என்பதை எதிர்பார்த்து ரஷ்ய தலைவர்கள் வருஷ கணக்காக வேலை செய்து வந்திருக்கிருர்கள். ஆசிய ரஷ்யா வின் இயற்கை வளங்களை பல வருஷ காலமாக மிகவும் மும்முரமாய் அவர்கள் அபிவிருத்தி செய்து வந்திருக்கிருர்கள். சிறிது காலமாக தொழில் நிலை யங்களை மேற்றிசையிலிருந்து வெகு தூரத்துக்கு கொண்டுபோக வேண்டுமென்னும் தீர்மானத்துடன் ரஷ்ய அரசாங்கம் வேலை செய்திருக்கிறது.

ரஷ்யர்களுக்கு இப்போதேற்பட்டுள்ள நிலைமையில் பல ஆபத்துக்களுக்கு இடமிருந்தாலும் அதைரியத் துக்கிடமில்லை.

இப்போதுள்ள நிலைமையில் யூரல்ஸ் பிரதேசமும், மேற்கு சைபீரியா பிரதேசமும், ரஷ்யாவின் மிக முக்கியமான தொழிற்சாலை பிரதேசமாகிவிட்டன.

யூரல்ஸ் பிரதேசத்தில் இரும்பு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்தப் பிரதேசத்தில் பொட்டாசியம் உப்புகள் நிறையக் கிடைக்கின்றன. இன்னும் வெடி மருந்துகளும், அக்னித் திராவகமும் இங்கு கிடைக் கின்றன.

கருங்கடலுக்கும், காஸ்பியன் கடலுக்கும் இடையே உள்ள ஒரு பாலம்போல டிரான்ஸ்காகேஷியா விளங்குகிறது. 1940-ல் ரஷ்யா உற்பத்தி செய்த சுமார் 3½ கோடி டன் எண்ணெயில் டிரான்ஸ் காகேஷியா 70 லட்சம் டன் எண்ணெய் உற்பத்தி செய்தது.

### சைபீரியா.

சைபீரியாப் பிரதேசத்தில் நிறைய சுரங்கப் பொருள்கள் இருக்கின்றன. ஆனல் அப்பிரதேசத் தில் சுரங்கங்கள் அதிகமாக வெட்டப்பட்டு, பொருள் கள் எடுக்கப்படவில்லை. இங்கு காந்த இரும்பு காணப்படுகிறது. தங்கச் சுரங்கங்கள் நன்ருக வேலை செய்கின்றன.

விளாடிவாஸ்டாக்கிலும், பிளகாவ் யெஸ்சென்ஸ்க் கிலும், கப்பல் கட்டும் தொழிற் சாலைகளும் கப்பல் மராமத்து தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஜப்பான் எப்பொழுதாவது சைபீரியாவைப் பயமுறுத் தும் பட்சத்தில், இந்தப் பிரதேசம் பொருளாதார விஷயத்திலும் சரி, ராணுவ விஷயத்திலும் சரி, தனக்கு வேண்டிய தேவைகளைத் தன்னிடமே

கொண்டுள்ளது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. உலோக சாதனங்கள், தொழில் சாதனங்களைத் தவிர இங்கு அநேக வித தானியங்களும் எதேஷ்டமாகக் கிடைக்கின்றன. பத்து லட்சம் பேர் கொண்ட ரஷ்யாவின் தூரக் கிழக்கு சேனை தனிப்பட்ட சேனையாகும். ரஷ்யாவின் மேற்குப் பிரதேசத்தின் உதவியில்லாமலேயே சைபீரியாவை ரஷ்யா காப்பாற்ற முடியும்.

## 5. பால்கன்ஸ், துருக்கி, இரான் முதலியன

இரான் சண்டையில் திறமையாகப் போர் புரிந்ததற்காக, இன்னும் இரண்டு இந்திய சிப்பாய்களுக்குப் பதக்கங்கள் அளிக்கப்பட்டன. நாயக்சானன் சிங், சிப்பாய் பச்சான் சிங் என்ற இந்த இரண்டு சிப்பாய்களும் 11-வது சீக்கியப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள். 40 இரானியர்கள் யந்திர பீரங்கிகளால் சுட்டுக்கொண்டிருக்கும்போது, சானன் சிங் தைரியமாக தன்னுடைய படையினருடன் முன் சென்று யந்திர பீரங்கிகளைத் தூக்கி நாசமாக்கிவிட்டார். பச்சான் சிங் என்பவர் தானே ஏழு பேரைத் துப்பாக்கி முனையால் கொன்றுவிட்டார். அவருடைய பட்டாளத் தளகர்த்தர் அருகில் கொல்லப்பட்டுக் கிடந்தும், பச்சான் சிங் தைரியமாகச் சென்று எதிரிகளுடன் போர் புரிந்தார்.

## 6. கப்பல் நிலைமை

சென்றவாரம், நேச தேசத்தார்களுடைய கப்பல் நஷ்டத்தைக்குறித்து, பிரிட்டனின் கப்பற் படை மந்திரி, மிஸ்டர் ஏ.வி. அலெக்சாண்டர், சில விவரங்களைத் தெரிவித்தார். சென்ற ஒரு வருஷத்தில் நேச தேசக் கப்பல்களின் நஷ்டம் குறைந்திருக்கிறதென்றும், ஜெர்மன் சப்மரீன்கள் அட்லாண்டிக் கடலில் அட்டகாசம் செய்துகொண்டிருந்தாலும், பிரிட்டிஷ் கான்வாய் கப்பல்கள் அபாயகரமான வழியின் மூலமாகப் போய்க்கொண்டுதானிருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்

ஜப்பான் யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறது. சைபீரியாவின் மேலாவது அல்லது தாய்லாந்தின் மேலாவது படையெடுக்க நினைத்திருக்கிறது. அமெரிக்காவுடன் செய்த சமாதானப் பேச்சுகள் பிரயோஜனப்படவில்லை. சென்ற வாரத்திய தூரக் கிழக்கு அரங்கத்தின் நிலைமை இந்த இதழில் ஒரு தனிக் கட்டுரையில் மிக விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

## 8. விஷியும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சும்

பிரான்சு தேசம் இரண்டு பிரிவாக இருக்கிறது. ஒரு பிரிவு ஜெர்மானியர்கள் ஆட்சியின் கீழ் இருக்கிறது. மற்றொன்று பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியின் கீழ் இருக்கிறது. பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சியின்கீழ் இருக்கும் பாகத்துக்குத் தலைநகரம் விஷி என்பது. விஷி அரசாங்க ஆட்சி பேருக்குப் பிரெஞ்சுக்காரர்களுடைய ஆட்சியே ஒழிய, உண்மையில் அது ஜெர்மனியின் கையாள்களுடைய ஆட்சிதான். இந்த அடிமைகளுடைய ஆட்சியின் கீழ் வேலை செய்வதற்கு தங்களுக்கு இஷ்டமில்லை என்று இரண்டு பிரெஞ்சு பெண்மணிகள் சென்றவாரம் தங்களுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டார்கள். அவர்கள் அயர்லாந்தில் உள்ள பிரெஞ்சு ஸ்தானீகர் ஆபீசில் காரியதரிசிகளாயிருந்தார்கள். சுதந்தர உணர்ச்சி மிகுதியாக உடைய அயர்லாந்தில், சுதந்தர உணர்ச்சியை இழந்த விஷி அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகத் தாங்கள் இருக்க விரும்பவில்லை என்று தங்கள் ராஜினாமா கடிதத்தில் எழுதியிருக்கிறார்கள். அந்த ராஜினாமா கடிதம் விஷி அரசாங்கத்தின் அயல் நாட்டு மந்திரியான அட்மிரல் தார்லானுக்கு அனுப்பப்பட்டது. அட்மிரல் தார்லான் ஹிட்லருக்கு ரொம்பவும் வேண்டியவர். அட்மிரல் தார்லானுக்கு நல்ல புத்தி போதித்த பெண்மணிகளின் பெயர் சாபராய், ரோஷி என்பனவாகும்.

### மாஜி முதல் மந்திரிகள் கைதி

அட்மிரல் தார்லானுடைய தலைவர், விஷி அரசாங்கத்தின் முதல் மந்திரியான மார்ஷல் பீத்தான். அவரும் ஜெர்மனிக்கு அனுகூலமாக வேலைசெய்பவர். அரசியல் நியாய சபையின் சிபார்சின்படி அவர் பிரான்சின் பழைய தலைவர்களை எல்லாம் போட்டுப் பூட்டிவிட்டார். பூட்டப்பட்ட தலைவர்களுடைய பெயர் பின் வருமாறு :—

யுத்தம் ஆரம்பிக்கும்போது பிரான்சின் முதல் மந்திரியாயிருந்த மிஸ்டர் எட்வர்டு டலாடியே; பொதுவுடைமைக்கட்சியைச் சேர்ந்த மாஜி முதல் மந்திரி மிஸ்டர் லியான் புளூம், மாஜி பிரதம தளகர்த்தராயிருந்த ஜெனரல் கேமலான், பிரான்சு வீழ்ச்சியடைந்தபோது முதல் மந்திரியாயிருந்த மிஸ்டர் பால் ரேனாட்: "புலி" என்று பேர்படைத்த கிளெமென்கோவின் வலதுகை போலிருந்த மாஜி குடியேற்ற நாட்டு மந்திரி, மிஸ்டர் மாண்டல் ; மாஜி ஆகாய விமானப்படை மந்திரி, மிஸ்டர் கைலாசாம்பர்; மாஜி யுத்த தளவாட அதிகாரி, மிஸ்டர் சாக்கோமெட்.

மேல் குறிப்பிடப்பட்ட பிரபல பிரெஞ்சு அரசியல்வாதிகளும், தேசபக்தர்களும், மார்ஷல் பீத்தானுடைய உத்தரவின்மேல் கைதிகளாக சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் தங்களுடைய தேசத்தின்மேல் அன்பு கொண்டதைத் தவிற, வேறு யாதொரு குற்றமும் செய்யவில்லை. அவர்கள் என்ன குற்றம் செய்திருந்தாலும், அவர்கள் கோர்ட்டின் முன் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவேண்டும். ஆனால் விஷி அரசாங்கத்தில் அம்மாதிரி செய்யப்படவில்லை. ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட நாடுகளைப்போல, கோர்ட்டும், விசாரணையும், நியாயமும், விஷி அரசாங்கத்தின் கீழ் விலக்கப்பட்டது போலிருக்கிறது.

### வேலியே பயிரை மேய்தல்!

கோர்ட்டு விசாரணை செய்வதனால் அதிகக் கால தாமதம் ஆகிறது என்று மார்ஷல் பீத்தான் விஷி நகரத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் சொன்னார். கோர்ட்டு விசாரணை மெதுவாகவும், படிப்படியாகவும், நடப்பதாலும், அதனால் நாட்டில் பரபரப்பு அதிகப்படுவதாலும், அதைத் தான் விரும்பவில்லை என்று அவர் குறிப்பிட்டார். இதனால் ஒழுங்கானதும், நியாயமுமான விசாரணையை நாட்டின் முதல் மந்திரியே விரும்பவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. வேலியே பயிரை மேய்ந்தால், என்ன செய்வது? முதல் மந்திரியா யிருப்பவரே இவ்வளவு அநியாயமாக நடந்துகொண்டால், மற்றவர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதேயில்லை.

இப்படிப்பட்ட அநியாயங்களை பிரெஞ்சு மக்கள் விரும்புவதில்லை. ஜெர்மனிக்கு அடிமையாக இருக்கும் விஷி அரசாங்கத்தையும், பிரெஞ்சு மக்களை அடிமையாக நடத்தும் ஜெர்மன் அதிகாரிகளையும் பிரெஞ்சுக்காரர்கள் முழு மனதுடன் வெறுக்கிறார்கள். சுதந்தரத்தை விரும்பும் பிரெஞ்சு மக்கள் ஜெர்மானியர்கள் செய்யும் கொடுங்கோலாட்சியை பொறுக்காமல் அவர்களைக் கொலை செய்யவும் ஆரம்பித்து விட்டார்கள். சென்றவாரம் ஒரு முக்கிய ஜெர்மன் ராணுவத் தளகர்த்தர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சில் நாண்டிஸ் ஜில்லாவில் அவர் தளகர்த்தரா யிருந்தார். கரையோரத்தில் இருட்டில் அவர் போய்க்கொண்டிருக்கும்போது, இரண்டுபேர் அவரை நோக்கி ஆறு தடவை சுட்டார்கள். சுட்டுவிட்டு இருட்டில் மறைந்து தப்பி ஓடிவிட்டார்கள்.

## 9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்

ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட நாடுகளில் கலகங்கள் நடக்கின்றன. முக்கியமாக செக்கோஸ்லாவாக்கியா என்ற நாட்டில் சென்ற வாரம் பல கலகங்களும் வேலை நிறுத்தங்களும் ஏற்பட்டன. ஹேட்ரிக் என்ற புதிய ஜெர்மன் கவர்னரின் அடக்குமுறை ஆட்சி செக்கியர்களை அதிகமாகத் தூண்டியிருக்கிறது. அவருடைய அட்டூழியங்கள் அதிகரிக்க அதிகரிக்க, செக்கியர்களுடைய எதிர்ப்பும் வளர்ந்து கொண்டே வரு

கிறது. ஒரு முக்கியமான ஆகாய விமானத் தொழிற்சாலையில், தொழிலாளர்கள் வேலை செய்ய மறுத்துவிட்டார்கள். சில நாள்களுக்குப் பிறகு, மற்றொரு ஆகாயவிமானத் தொழிற்சாலையில், வேலை நிறுத்தம் நடந்தது. அங்குள்ள தொழிலாளர்களில் அநேகரை ஜெர்மன் ரகசியப் போலீஸ்காரர்கள் கைது செய்து ஜெயிலில் வைத்துவிட்டார்கள். அவர்களுக்கு என்ன தண்டனை கொடுத்தார்கள் என்பது வெளியில் தெரியவில்லை. வேறொரு ஆகாய விமானத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்யப்பட்டதால், ஆகாய விமானங்கள் செய்யும் வேலை தடைப்படுத்தப்பட்டது. செக்கோஸ்லாவாக்கியாவில் உள்ள மருந்துகள் செய்யும் தொழிற்சாலை ஒன்று ஜெர்மானியர்களால் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. அதை செக்கியர்கள் நெருப்பு வைத்துக் கொளுத்திவிட்டார்கள்.

சோபியா என்ற இடத்தில் போலீஸ் தலைமை ஆபீசுக்கு எதிரில் இரண்டு ஜெர்மன் சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள்.

பால்கன் தீபகற்பத்தில் உள்ள கிரீஸ் தேசத்திலும், ஜெர்மானியர்கள் மேலும், அவர்களுடைய உத்தரவின்கீழ் வேலை பார்க்கும் பல்கேரியர்கள் மேலும், விரோத உணர்ச்சி பலப்பட்டு வருகிறது. பல்கேரியர்கள் கிரீசில் அமைதியை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். ஆனால் நாட்டு மக்கள் அதைத் தடுத்துக்கொண்டு வருகிறார்கள். பல்கேரியர்கள் தங்களுடைய அதிகாரத்தைக் கிரேக்கர்கள் அலட்சியம் செய்கிறார்கள் என்று நினைத்து, அநேக கொடுமைகளைச் செய்து வருகிறார்கள். பிணையாக எடுக்கப்பட்ட அநேக கிரேக்கர்களை, யாதொரு குற்றமும் செய்யாதவர்களை, அநியாயமாகச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். பல ஜில்லாக்களில் கலகம் நடந்தது. 30 பிரபல கிரேக்க யூதர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. தங்களுடைய வீட்டில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும்போது, பல்கேரியர்கள் அவர்களைக் கைது செய்தார்கள். ஒரு விசாரணையும் நடக்காமல் இருக்கும் போது, கைது செய்யப்பட்டவர்களில் நாலு பேர் யாதொரு காரணமுமில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்த சமாச்சாரம் பரவியதும், கொடுமை நடந்த மாகாணத்தில் ஒரு பெரிய கலகம் நடந்தது. அநேக பல்கேரியர்கள் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்ட பல்கேரியர் ஒவ்வொருவருக்கும், ஆறு பேர் கிரேக்கர்கள் கொல்லப்பட்டார்கள். அநேக இடங்களில் ஏராளமான கிரேக்கர்கள் உயிரிழந்தார்கள். கொல்லப்பட்ட கிரேக்கர்களுடைய கணக்கு சுமார் 15,000 இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. கிரேக்கர்களிடம் ஆயுதம் இல்லாத போதிலும், இந்தக் கொடுங்கோலாட்சியை எதிர்த்து அவர்கள் போர் புரிந்தார்கள். இந்த சண்டைகளில் 300 பல்கேரியர்களும், 7 ஜெர்மானியர்களும் கொல்லப்பட்டார்கள்.

சில இடங்களில் பல்கேரியர்கள் வேண்டுமென்றே கலகம் உண்டாகும்படி தூண்டினார்கள். ஜெர்மானியர்கள் ஒரு கிரேக்க மாகாணத்திலுள்ள புகையிலைகளை அறுவடை செய்து கொண்டுபோய்விட்டார்கள். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு பல்கேரியர்கள் கலகம் செய்யும்படி கிரேக்கர்களைத் தூண்டினார்.

## 10. நடுநிலைமை நாடுகள்

அயர்லாந்து என்பது பிரிட்டனுக்கு அருகில் மேற்கில் உள்ள ஒரு பெரிய தீவு. அது இந்த யுத்தத்தில் எந்தப் பக்கத்திலும் சேராமல் நடு நிலைமை வகித்திருக்கிறது. இதற்குக் காரணம் அயர்லாந்து குடியரசின் தலைவராகிய, மிஸ். டிவேலரா தான். ஆனால் அவர் சென்ற வாரத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில், அயர்லாந்து யுத்தத்தில் சம்பந்தப்படும்படி நேரிடலாம் என்று அயர்லாந்து மக்களை எச்சரிக்கை செய்திருக்கிறார். அவர் கூறியதன் சுருக்கமாவது :-

அயர்லாந்து மக்கள் தங்களுக்கு வரும் தீங்கை உணராமல் இருக்கிறார்கள். யுத்தம் எப்போதாவது அயர்லாந்தை நெருங்கி வரலாம் என்ற நிலைமை போய்விட்டது ; அதிக சீக்கிரத்தில் யுத்தம் அயர்லாந்தை நெருங்கலாம் என்ற நிலைமை வந்து விட்டது. யுத்தத்திற்காக எல்லோரும் தயாராகவேண்டும். ஏராளமான இளைஞர்கள் பட்டாளத்தில் சேர வேண்டும்.

மிஸ்டர் டிவேலரா பேசியதிலிருந்து, அயர்லாந்து தன் கடமையை இப்போது நன்றாகத் தெரிந்து கொண்டது என்று தெரிகிறது. மதில் மேல் உள்ள பூனையைப் போல், நடு நிலைமை வகித்த அயர்லாந்து சீக்கிரத்தில் யுத்தத்தில் ஈடுபட்டு, தன்னுடைய நடு நிலைமைக் கொள்கையை விடும்படி நேரலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### தாய்லாந்தை மிரட்டுதல்

பர்மாவுக்கு அருகிலுள்ள தாய்லாந்து என்பது ஒரு நடு நிலைமை நாடு. ஜப்பான் அதைத் தன் கைவசத்தில் வைத்துக்கொண்டு, தன்னுடைய கெட்ட எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு உபயோகப்படுத்த விரும்புகிறது. ஆனால், நேச தேசத்தார்களுடைய முயற்சியினால் ஜப்பானுடைய எண்ணம் தடைப்பட்டிருக்கிறது. ஜப்பானுடைய புதிய மந்திரி சபை நியமிக்கப்பட்ட பிறகு, தாய்லாந்து விஷயத்தில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது. பிரிட்டனுக்கு அனுகூலமாக தாய்லாந்து இருப்பதைப்பற்றி ஜப்பான் எச்சரிக்கை செய்கிறதென்றும், ஒரு ஜப்பானியப் பத்திரிகை கூறுகிறது. இதனால். ஏதாவது சாக்கு அகப்பட்டால் அதைக் காரணமாக வைத்துக்கொண்டு, ஜப்பான் தாய்லாந்தைத் தொந்தரவு படுத்தும்போலிருக்கிறது. ஆனால் தாய்லாந்து அதிகாரிகள் தாய்லாந்து நடுநிலைமையாக இருக்குமே ஒழிய, யுத்தத்தில் எந்தப் பக்கமும் சேராது என்று வற்புறுத்துகிறார்கள்.

இந்தியாவின் வடக்கில் உள்ள நடுநிலைமை நாடு ஆப்பகனிஸ்தானம் என்பது. இதில் அநேக ஜெர்மன் வேவுகாரர்களும், இத்தாலிய வேவுகாரர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய நாடுகளின் ஸ்தானீக ஆபீசுகளைத் தங்கள் தலைமை ஸ்தானமாகக் கொண்டு தங்களுடைய சூழ்ச்சிகளை நடத்தி வந்தார்கள். அந்த விஷயம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும், ரஷ்ய அரசாங்கத்தாருக்கும் நன்றாகத் தெரிந்தது. அவர்கள் ஆப்கன் அரசாங்கத்துக்கு நிலைமையை விளக்கிக்கூறி, ஆப்கனிஸ்தானத்திலிருக்கும் ஸ்தானீக ஆபீசுக்குச் சம்பந்தப்படாத எல்லா ஜெர்மானியர்களையும், இத்தாலியர்களையும், அப்புறப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்கள். அதன்படி ஆப்கன் அரசாங்கம் அவர்களை ஆப்கனிஸ்தானத்தை விட்டு வெளியே போகும்படி சொல்லிவிட்டது. அவர்கள் தங்களுடைய சொந்த நாட்டுக்குச் செல்வதற்கு, பிரிட்டிஷ் அரசாங்கம் சகல ஏற்பாடுகளும் செய்திருக்கிறது.

### ஆப்கனிஸ்தானத்தின் ஒழுங்கு.

ஆப்கனிஸ்தானத்தில் இருக்கும் ஜெர்மனியர்களை அப்புறப்படுத்துவதன் சம்பந்தமாக, ஆப்கன் அரசாங்கம் நடந்துகொண்டமாதிரி மெச்சத் தகுந்ததாய் இருக்கிறது. இதுசம்பந்தமாக, பழைய இரான் அரசாங்கம் பிரிட்டனுக்கு எவ்வளவோ தொந்தரவு கொடுத்தது. இரானில் ஏராளமான ஜெர்மன் வேவுகாரர்கள், யாத்திரை செய்பவர்கள்போல வந்து குடியேறியிருந்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாக, மழைக்காலத்தில் ஒண்டுவதற்கு அராபியன் கூடாரத்தில் இடங்கேட்ட ஒட்டகத்தைப்போல, அவர்கள் இரான் முழுவதும் பரவியிருந்தார்கள். மெதுவாக, இரான் அரசாங்கத்தையே தங்களுடைய கையில் சிக்கவைத்துக்கொண்டு, ஜெர்மனிக்கு உதவியாக இரானை வைத்துக்கொள்வார்கள்போலிருந்தது. இந்த சமயத்தில், பிரிட்டன் இரான் அரசரை எச்சரிக்கை செய்தது ; பல தடவைகள் எச்சரிக்கை செய்தது ; பழைய இரான் அரசர் ஜெர்மனிக்கு வேண்டியவராகையால் அவர் ஒன்றும் செய்யவில்லை. பிறகு அவரே அரச பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இரானை விட்டு விலகும்படி நேர்ந்தது. புதிய இரான் அரசாங்கம் பிரிட்டன் கேட்டபடி நடந்துகொண்டது. ஆனால் ஆப்கனிஸ்தானத்தில் விஷயம் அதிக சீக்கிரத்தில் முடிந்துவிட்டது. பிரிட்டனும் ரஷ்யாவும் கேட்டுக்கொண்டபடி, எதிரி தேசமக்கள் ஆப்கனிஸ்தானத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.